திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே,

(அ) இல்லை.

(ஆ) உயர்நீதி மன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ்உள்ள குற்றவியல் நீதி மன்றங்கள் 14—11—1976 முதல் தீர்ப்புகளையும், ஆணைகளையும் தமிழில் வழங்க வேண்டுமென்ற காரணத்தினால் குற்றவியல் நீதிமன்றங்கள் செயல்படுத்தும் சட்டங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்படுவதற்கு முன்னுரிமை அளிக்கப் பட்டுள்ளது.

மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுகின்ற சட்டங்கள், சிவில் நீதி மன்றங்களால் செயலாக்கப்பட்டு வருகின்றன. அவைகள் மொழி பெயர்ப்பிற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. இருப்பினும் சொத்து மாற்றுச் சட்டம், அதாவது டிரான்ஸ்ஃபர் ஆஃப் ப்ராப்பர்ட்டி மொழி பெயர்க்கப்பட்டு விட்டது. அது ஆணைக் குழுவின் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேல் நிலைப் பள்ளிகள்.

*வினா எண். 142—திரு. பெ.சு. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) ஒன்றியத்திற்கு ஒன்று என்ற கணக்கில் எத்தனை ஒன்றியங்களில் உயர் செகண்டரி துவக்கப்பட்டுள்ளன ?

(ஆ) ஒன்றிய அளவில் உயர் செகண்டரி பள்ளிகள் துவக்கப்படாத ஒன்றியங்கள் எத்தனை ?

(இ) அதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) 327 ஒன்றியங்களில்.

(ஆ) 47.

(இ) மேல்நிலைப் பள்ளிகளே இல்லாத 47 ஒன்றியங்களில், 33 ஒன்றியங்களின் மேல்நிலைப் பள்ளிக் கல்வியின் தேவையை அருகிலுள்ள நகராட்சிகளில் உள்ள மேல்நிலைப்பள்ளிகள் பூர்த்தி செய்கின்றன. மீதமுள்ள 14 ஒன்றியங்களில், ஓரிரு உயர்நிலைப் பள்ளிகளே உள்ளன. அவைகளும் மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்தும் அளவுக்கு வசதிகளோ அல்லது சேரும் மாணவர்களின் எண்ணிக்கையோ இல்லை. இத்தகைய ஒன்றியங்களின் மேல் நிலைப் பள்ளிக் கல்வியின் தேவையை அருகிலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி ஒன்றியங்களிலுள்ள மேல் நிலைப் பள்ளிகள் பூர்த்தி செய்கின்றன.

1979 பிப்ரவரி 23]

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, என்னுடைய தொகுதியில் துரிஞ்சாபுரத்தில் இல்லாமல் இருக்கிறது. அதனால் திருவண்ணாமலைக்கு, 7, 8 மைல் தூரம் பஸ்ஸிலே செல்ல வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. எனவே, மல்லவாடி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டுமென்று கேட்கப்பட்டது. இந்த ஆண்டாவது அதை மேல் நிலைப் பள்ளியாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்பொழுது புதிதாக மேல்நிலைப் பள்ளிகளைத் துவக்குவதற்கு எந்த முடிவையும் அரசு மேற்கொள்ளவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய அந்தக் கருத்தினைக் கவனத்திலே நான் எடுத்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-20.]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும் போது ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று வீதம் மேல்நிலைப் பள்ளி அமைப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம் என்று சொன்னார். வருகிற ஆண்டிலே ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று மேல்நிலைப் பள்ளி அரசுப் பள்ளிகளிலே நிச்சயமாக ஆரம்பிக்கப்படுமா? அதே போல், அம்பாசமுத்திரம் யூனியன் பகுதியிலே உயர் செகண்டரி பள்ளி ஒன்று அரசு தரப்பிலே ஆரம்பிக்கப் படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, புதிதாக மேல்நிலைப் பள்ளிகளைத் துவக்குகின்ற முடிவை அரசு எடுத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கவனத்திலே எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவரவர்களே, தொடங்கப்பட்டுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் அன்எகனாமிக்கல் ஸ்டிரென்த் உள்ள பள்ளிகள் எவையேனும் உள்ளனவா ? ஆமெனில், அவை பற்றிய விவரத்தை அளிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை.

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, துவக்கப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில் சில பாடங்களைப் போதிப்பதற்கான தேவையான தகுதிபடைத்த ஆசிரியர்கள் இல்லையென்று கூறப்படுகிறதே அது உண்மையா ? குறிப்பாக, லேடி வெலிங்டன் காலேஜுக்கு ஒட்டியுள்ள மாடல் பள்ளியில்

கணக்கு ஆசிரியர் இல்லையென்று கூறப்படுகிறதே அப்படிப்பட்ட குறையினை உடனடியாக நீக்க அரசு முன்வருமா ? குறிப்பாக, பரீட்சை வருகிற காலமாக இருப்பதால், இந்தக் காலத்திலும் இல்லையென்ற குறையை நீக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஒ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, ஹையர் செக்கண்டரி பள்ளிகளை ஆரம்பிப்பதற்குப் பொதுமக்கள் பங்குத் தொகை கட்ட வேண்டுமென குறிப்பிட்டிருந்தார்கள். துவக்கப்பட்ட எல்லா பள்ளிகளாலும் அந்தப் பங்குத் தொகை கட்டப்பட்டுவிட்டதா ? அப்படி இல்லையென்றால், கிராமப் புறங்களில் உள்ள பள்ளிகள் அப்பங்குத் தொகையைக் கட்ட கஷ்டமாக இருக்கிற காரணத்தால், அதைத் தளர்த்த அரசு முன்வருமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, கொடுக்காத பள்ளிகள் மீது நாம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று நான் முன்பே கூறியிருக்கிறேன். ஆகவே, அப்படி இருக்கிற காரணத்தால் இந்தப் பிரச்சினையே எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி ஒன்றியத்துக்கு ஒன்று என்ற கணக்கில் எத்தனை ஒன்றியங்களில் உயர் செகண்டரி துவக்கப்பட்டுள்ளது, துவக்கப்படவில்லையென்பதாகும். ஒவ்வொரு ஒன்றியத்திலேயும் உயர்செகண்டரி பள்ளிகள் இல்லை என்றும் ஆசிரியர்கள் இல்லையென்றும் உறுப்பினர்கள் சொல்லிக்கொண்டே கேள்வி கேட்டுக்கொண்டு போனால் முடிவே இருக்காது. கடைசியாக, திரு. துரை முத்துசாமியைக் கேட்க அனுமதிக்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, முதல் கட்டமாக, ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒன்று என்ற திட்டத்தின்கீழ் அனுமதியளிக்கப்பட்ட அத்தனை இடங்களிலும் கட்டிடம் கட்டப்பட்டு விட்டதா ? குறிப்பாக, சங்கராபுரம் ஒன்றியத்திற்கு வழங்கிய பள்ளிக்குத் தேவையான தொகையையும் கட்டிவிட்டார்கள். மற்றவற்றையும், பங்குத்தொகையையும் கட்டி விட்டார்கள். அங்கு உடனடியாக, கட்டிடம் கட்டிக் கொடுக்கப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அரசினர் மேல் நிலைப் பள்ளிகளுக்குப் பரிசோதனை ஆய்வுக் கூடம் கட்டுவதான முடிவை எடுத்து அது கட்டப்பட்டு வருகிறது.

1979 பிப்ரவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி கேட்டவருக்கு இரண்டாவது சந்தர்ப்பம். ஆகவே, திரு. பெ.சு, திருவேங்கடம்.

திரு. பெ.சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, 14 ஊராட்சி ஒன்றியங்கள், நகரங்களுக்குத் தூரமாக இருந்ததாலே மேல் நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கிற கருத்து இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த 14 ஊராட்சி எவை, எவை என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அந்த 14 ஒன்றியங்களின் பெயர்களாவன : பூண்டி, சிததாமூர், கீரப்பாளையம், கம்மாபுரம், திருநாவலூர், வல்லம், வானூர், கொள்ளிடம், சேதுபாவா சத்திரம், கடலூர், விராலிமலை, குஜிலியாம்பாறை, நரிக்குடி, கன்னன்குடி.

*வினா எண். 143—திரு. ஏ. ராமலிங்கம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

சிதம்பரம் அரசினர் நந்தனார் ஆண்கள், பெண்கள் பள்ளிகளில் உயர் செகண்டரி வகுப்புகள் தொடங்க அரசுக்கு உத்தேசம உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சிதம்பரம் அரசினர் நந்தனார் ஆண்கள், பெண்கள் ஆகிய இரு பள்ளிகளிலும் மேல் நிலைப் பள்ளி வகுப்புகள் நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. ராமலிங்கம் : அனுமதி வழங்கப்பட்டமைக்கு மிக்க நன்றி. இருப்பினும் சையன்ஸ் லேபரட்டரி கட்டிட வசதி இல்லை. ஆகவே, கட்டிட வசதியும் சையன்ஸ் லேபரட்டரியும் கொண்டு வர அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இது குறித்து அரசு பரிசீலிக்கும்.

*வினா எண். 144—திரு. கே.ஜே. சுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வட ஆற்காடு மாவட்டம், போளூர் வட்டம், களம்பூரில் Higher Secondary பள்ளி துவக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?